**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 164/2023</u>**
**<u>வழக்கு சாட்சி PW-7</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமர்கனி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கருவேல்நாடார் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | ஆவுடையானூர் | வயது | : | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 23rd, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ஆவுடையானூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி பஜகத் அலி, நல்லுச்சாமி ஆகியோர்களின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் 3 அத்தாட்சிகளில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். நான் அந்த கையெழுத்துக்களை போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க என்னுடைய சித்தப்பா அருணாச்சலத்தின் வீட்டில் வைத்து போட்டு கொடுத்தேன். என்னுடைய சித்தப்பா அருணாச்சலத்தை கட்டி போட்டு திருடர்கள் கொள்ளையடித்து சென்றதாக கேள்விபட்டேன்.

எதிரி மாரியப்பனை போலீசார் கைது செய்து, அவரிடமிருந்து ரூ.1,49,000/-ஐ அகஸ்தியப்பட்டியில் வைத்து கைப்பற்றினார்கள். போலீசார் நகைகளையும் கைப்பற்றினார்கள். நானும், ஜெகன்நாதனும் உடன் இருந்தோம். என் முன்னிலையில் விசாரணை செய்து எதிரிகளின் பெயர் எனக்கு தெரியாது. மாரியப்பன் பெயர் மட்டும் எனக்கு தெரியும். ஒப்புதல்

வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் மட்டும் **அ.சா.ஆ.7, அ.சா.ஆ.8** ஆகும். அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் மட்டும் **அ.சா.ஆ.9, அ.சா.ஆ.10 மற்றும் அ.சா.ஆ.11** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அகஸ்தியப்பட்டிக்கு காரில சென்றோம். நானும், ஜெகநாதனும், என்னுடைய சித்தப்பாவும் சென்றோம். காவல் ஆய்வாளர் வந்தார். நான் இந்த விபரங்களை ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன். அ.சா.2 என்னுடைய சித்தப்பா என்பதினால், அவருக்கு ஆதரவாக வேண்டி பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.23 17:58:34 +0530